**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:** 531 **நாள்:** 01.10.2026

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அடையாறு மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**ஒக்கியம் மடுவு கால்வாய் பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே 10 மீ. அகலத்தில் நீர் வெளியேறி வந்ததைத் தொடர்ந்து, தற்போது அங்குள்ள மண் தடுப்பினை அகற்றி 98 மீ. அகலத்திற்கு தண்ணீர் சீராகச் செல்வதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அடையாறு மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை இன்று (01.10.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட டைடல் பார்க் பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகள் நடைபெறும் இடத்தில் பக்கிங்ஹாம் கால்வாயில் இணைக்கும் வகையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட ஒக்கியம் மடுவு கால்வாய் பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகள் நடைபெறும் இடத்தில் 10 மீ. அகலத்திற்கு இக்கால்வாயில் நீர் வெளியேறி வந்த நிலையில் தற்போது அங்குள்ள மண் தடுப்புகளை 98 மீ. அகலத்திற்கு அகற்றி தண்ணீர் சீராகச் செல்வதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, நூக்கம் பாளையம் சந்திப்பு சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., கண்காணிப்புப் பொறியாளர் திரு.முரளி, மண்டல அலுவலர் திரு.ஜி.லோகேஸ்வரன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நீர்வளத்துறை, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட சேவைத் துறைகளின் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**